மார்ச் 3-9

# பாடம் 10

# உக்கிராணத்துவத்தின் பங்கு



**மனன வசனம்**

**தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல, பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். 1 தெச 4:7.**

**ஆராய்ச்சிக்கு**

**கொலோ 1:16-18; எபிரெயர் 4:14-16; 3யோவான் 3; ஆதி 6:13-18; வெளி 14:6-12; 1பேதுரு 1:15,16.**

மார்ச் 3 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

உக்கிராணத்துவம் மிகுந்த ஆழமும் அகலமுமான ஒரு விஷயமாகும்; அதன் மூலைமுடுக்குகளை எல்லாம் ஆராய்வது கடினம்; நம்மைப் பிரமிக்கச்செய்யுமளவிற்கு அது பெரியது. உக்கிராணத்துவம் எளிதானாலும் சிக்கலானது; எனவே, அதுகுறித்து தவறாகப் புரிந்துகொள்ள வாய்ப்புள்ளது. ஆனாலும், அதில்லாமல் கிறிஸ்தவன் இல்லை, சபையும் இல்லை; அதில்லாமல் செயல்படவும் முடியாது. ஒரு கிறிஸ்தவன் ஒரு நல்ல உக்கிராணக்காரனாக இருக்கவேண்டும்.

'இது ஒரு கொள்கையோ தத்துவமோ அல்ல, மாறாக ஒரு செயல்திட்டம். மெய்யாகவே இதுதான் கிறிஸ்தவ வாழ்க்கையின் சட்டம். வாழ்க்கையை சரியாகப் புரிந்துகொள்ள இது தேவை; மெய்யான, உயிரோட்டமான ஆவிக்குரிய அனுபவத்திற்கு இது இன்றியமையாதது. இது வெறுமனே தகவல் அறிவு அல்ல, சித்தத்தோடு செயல்படவேண்டிய ஒன்று; வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் கண்டிப்பாக வெளிப்படவேண்டிய ஒரு விஷயம்.' - *LeRoy E. Froom, Stewardship in Its Larger Aspects (Mountain View: Calif.: Pacific Press Publishing Association, 1929), p. 5.*

கிறிஸ்தவ உக்கிராணத்துவத்தில் என்னென்ன முக்கிய விஷயங்கள் எல்லாம் உள்ளடங்கியுள்ளன? கிறிஸ்தவ வாழ்க்கையில் உக்கிராணத்துவத்தின் பங்குபற்றி இந்த வாரம் ஆராய்வோம். ஒரு சுவாரசியமான உவமை மூலம் அதை ஆராய்வோம். அதாவது, ஓர் இரதத்தின் சக்கரத்தோடு அதை ஒப்பிட்டு ஆராய்வோம்.

2017, மார்ச் 10 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## கிறிஸ்துவே மையம்

வேதாகமம் முழுவதிற்கும் இயேசுதான் மையப்புள்ளி. யோவான் 5:39. நமக்கு அவரோடு உறவு இருக்கிறதா என்பதில் கவனமாக இருக்கவேண்டும். பாவத்திற்கான தண்டனையை அவர் செலுத்திவிட்டார்; 'அநேகரை மீட்கும்பொருளானார்.' மாற்கு 10:45. வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் இயேசுவுக்கு உள்ளது. மத் 28:18. எல்லாமே அவருடைய கரங்களில் இருக்கின்றன. யோவான் 13:3. அவருடைய நாமம் எல்லாவற்றிற்கும் மேலானது; ஒரு நாளில் முழங்கால்கள் யாவும் அவருக்குமுன்பாக முடங்கப்போகின்றன. பிலி 2:9-11.

'எல்லாவற்றிற்கும் ஜீவனுள்ள மையம் இயேசுவே.' - *EGW, Ev, p 1786.*

உக்கிராணத்துவத்தின் மையம் இயேசு; நம் ஆற்றலின் ஆதாரம் அவர். அவரால்தான் நாம் அர்த்தமுள்ள ஒரு வாழ்க்கையை வாழமுடிகிறது; நம் வாழ்வின் முக்கிய மையமாக அவர் இருப்பதை எல்லாருக்கும் விளங்கச்செய்ய முடிகிறது. பவுல் பல சோதனைகளைச் சந்தித்திருக்கலாம்; ஆனால், ''எங்கிருக்கிறேன்? என்ன நடக்கிறது?'' என்பவற்றைவிட ஒன்றே ஒன்றுதான் அவருடைய பிரதான நோக்கமாக இருந்தது; அதாவது, 'கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்.' பிலி 1:21.

***நம்மைப்பற்றிய அனைத்திலும் இயேசு மையமாக இருப்பதுபற்றி வேதாகமம் சொல்வது என்ன? கொலோ 1:16-18; ரோமர் 8:20,21; 2கொரி 5:17.***

---

கிறிஸ்து நம் மையமாக இல்லாதபட்சத்தில் உக்கிராணத்துவம் மெய்யானதாக இருக்கமுடியாது. கலா 2:20. 'ஆனந்த பாக்கியத்தின்' மையம் அவர். தீத்து 2:13. 'எல்லாவற்றிற்கும் முந்தினவர்; எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது.' கொலோ 1:17. சக்கரத்தின் மையமாக அச்சு இருந்து, வண்டியின் பாரத்தைச் சுமப்பதுபோல, உக்கிராணத்துவ வாழ்க்கையின் மையமாக கிறிஸ்து இருக்கிறார். உறுதிமிக்க அச்சானது சக்கரத்திற்கு ஸ்திரத்தன்மையைக் கொடுத்து, அதை சுழலச் செய்வதுபோல, நம் கிறிஸ்தவ வாழ்க்கையின் உறுதியான, திடமான மையமாக கிறிஸ்து இருக்கிறார். எபி 13:8. நாம் சிந்திக்கிற, செய்கிற ஒவ்வொன்றிலும் அவருடைய தாக்கம் இருக்கவேண்டும். உக்கிராணத்துவத்தின் அனைத்து அம்சங்களும் கிறிஸ்துவில் மையங்கொண்டு சுழலவேண்டும்.

'என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.' யோவான் 15:5. உக்கிராணத்துவத்தின் மையம் ஒரு வெற்றிடமாக இருக்கக்கூடாது; உயிரோடிருக்கும் கிறிஸ்து அங்கு இருக்கவேண்டும்; அவர் நம்முடைய குணங்களை இக் காலத்திற்கும் நித்தியத்திற்குமாக மாற்றியமைக்கிறார்.

---

இயேசுவே நம் வாழ்க்கையின் மையமாக இருப்பதாகச் சொல்வது வேறு; அவ்வாறே வாழ்வது வேறு. இயேசு உங்களுக்குள் ஜீவிப்பதை எவ்வாறு நீங்கள் நிச்சயமாக அறியலாம்? அவர் உங்களுக்குள் ஜீவிப்பதாக வாக்குரைத்திருக்கிறார்; நீங்கள் அனுமதித்தால் நிச்சயம் அதை நிறைவேற்றுவார்.

உக்கிராணத்துவப் பின்னணியில் ஆசரிப்புக்கூடாரம்பற்றி யாரும் அதிகமாக யோசித்துப் பார்ப்பதில்லை. ஆனால் தொடர்பு இருக்கிறது; ஏனென்றால், நம்முடைய நம்பிக்கையில் ஆசரிப்புக்கூடாரம் மிகமுக்கிய பங்காற்றுவதால், உக்கிராணத்துவமும் அதில் ஓர் அம்சமாக இருக்கிறது. ‘பரலோக ஆசரிப்புக் கூடாரத்தில் கிறிஸ்துவின் ஊழியம்குறித்து சரியாக அறிந்திருப்பதே நம் விசுவாசத்தின் அடித்தளமாக இருக்கிறது.’ - *EGW, Ev, p 221.* இந்த வேதாகமக் கருத்தின் அடிப்படையில் உக்கிராணத்துவத்தின் பங்குபற்றி நாம் அறிந்திருப்பது அவசியம்.

இரதம் ஒன்றின் உருளை குறித்து 1இராஜா 7:33 விவரிக்கிறது. சக்கரத்தின் குடமாக ஆசரிப்புக்கூடாரம் இருக்கிறதென வைத்துக்கொள்வோம். அது சக்கரத்தின் அச்சாணியுடன் இணைக்கப்பட்டு, சக்கரம் திரும்பும்போது அதற்கு ஸ்திரத்தன்மை வழங்குகிறது. கிறிஸ்து மரித்து, வெற்றிவேந்தராக உயிர்த்தெழுந்து , தம் மரணத்தின்மூலம் ஆசரிப்புக்கூடாரத்தில் ஊழியம்செய்யும் தகுதியைப் பெற்றார்; 2தீமோ 1:10. நம் விசுவாசத்திற்கான ஸ்திரத்தன்மையை அளிக்கிறார். எபி 6:19,20. ஆசரிப்புக்கூடாரத்திலிருந்து பூமியிலிருக்கும் நமக்காக ஊழியம்செய்கிறார். எபி 8:1,2.

‘வேதாகமம் மட்டுமே என்கிற நியதியின் அடிப்படையில், ஆசரிப்புக்கூடாரம் குறித்த பொதுவான கோட்பாட்டிலிருந்து வேதாகம அட்வென்ட்டிஸமானது தன் கோட்பாட்டு முறையை உருவாக்குகிறது.’ - ஃபெர்னன்டோ கேனல், *Secular Adventism? Exploring the Link Between Lifestyle and Salvation pp. 104, 105.*

***பரலோக ஆசரிப்புக்கூடாரத்தில் இயேசு ஊழியம்செய்வது குறித்து வேதாகமம் சொல்வது என்ன? 1யோவான் 2:1; எபிரெயர் 4:14-16; வெளி 14:7.***

கிறிஸ்தவர்களுடைய நம்பிக்கையின் மையமாக இருப்பது இரட்சிப்பும் மீட்பும்; இந்த மாபெரும் சத்தியத்தை வெளிப்படுத்த ஆசரிப்புக்கூடார கோட்பாடு உதவுகிறது. நமக்காக கிறிஸ்து மரித்ததையும், பரலோக பரிசுத்தஸ்தலத்தில் ஊழியம்செய்வதையும் ஆசரிப்புக்கூடாரம்மூலம் அறியமுடிகிறது. தேவனுடைய பிரமாணத்தின் முக்கியத்துவத்தையும், இறுதி நியாயத்தீர்ப்பின் நிஜத்தையும் மகா பரிசுத்த ஸ்தலத்தின்மூலம் அறியமுடிகிறது. இயேசு சிந்தின இரத்தத்தால் நாம் மீட்கப்படுகிறோம் எனும் வாக்குறுதியே எல்லாவற்றிற்கும் மையமாக இருக்கிறது.

ஆசரிப்புக்கூடார உண்மை வெளிப்படுத்தும் இரட்சிப்பு என்கிற மாபெரும் சத்தியத்தில் வேரூன்றிய வாழ்வானது உக்கிராணத்துவக் கடமையைப் பிரதிபலிக்கிறது. கிறிஸ்து நமக்காகச் செய்திருப்பதும், இப்போது செய்துகொண்டிருப்பதும் அதிகமாக விளங்கும்போது, நாம் கிறிஸ்துவிடம் நெருங்கிவருவோம்; அவருடைய ஊழியத்தையும் ஊழியநோக்கத்தையும் நிறைவேற்றுவோம்; அவருடைய போதனைக்குச் செவிகொடுப்போம்; உக்கிராணத்துவ நியதிகளின்படி வாழ்கிறவர்களுக்கு அவர் வைத்திருக்கும் திட்டத்தைப் புரிந்துகொள்வோம்.

பாவம், சுயம், சுயநலம் போன்றவற்றோடு நாம் போராடிவரும் நிலையில் எபி 4:14-16 தரும் ஆறுதல் என்ன? இந்த வாக்குறுதியிலிருந்து நாம் எவ்வாறு பெலமும் நம்பிக்கையும் பெற்றுக்கொள்ளலாம்?

## கிறிஸ்துவை மையமாகக் கொண்ட கோட்பாடுகள்

இரட்சிப்பின் மாபெரும் சத்தியத்தையும் சிலுவையையும் வல்லமையான விதத்தில் ஆசரிப்புக்கூடாரம் வெளிப்படுத்துகிறது. நம்முடைய கோட்பாடுகள் அனைத்துமே ஏதாவது ஒரு விதத்தில் நற்செய்தி வாக்குறுதியோடும் இரட்சிப்போடும் சம்பந்தப்பட்டிருக்கவேண்டும். ஒரு சக்கரத்தின் குறுக்குக்கம்பிகள்போல, 'இயேசுவை விசுவாசிப்பதால் இரட்சிக்கப்படுகிறோம்' என்கிற மாபெரும் சத்தியத்திலிருந்துதான் மற்ற அனைத்து கோட்பாடுகளும் உருவாகியிருக்கவேண்டும்.

'பாவத்தைப் பரிகரிக்க கிறிஸ்து பலியானார் என்கிற மாபெரும் சத்தியத்தைச் சுற்றியே மற்ற அனைத்து சத்தியங்களும் ஒன்றன்மேல் ஒன்றாக அமைந்துள்ளன. மீட்பின் மகத்துவ தியாகத்தை ஆராய்கிறவர்கள் கிருபையிலும் அறிவிலும் வளருவார்கள்.' – *EGW, 5SDABC, p 1137.*

***இயேசு தம்மை சத்தியம் என்று யோவான் 14:6இல் குறிப்பிடுகிறார்; இதன் அர்த்தம் என்ன? யோவான் 17:17. சத்தியத்தின்படி நாம் என்ன செய்யவேண்டும்? 3யோவான் 3.***

நம்மை உருவாக்குவதிலும் ஒரு திசையை நோக்கித் தள்ளுவதிலும் நம் கோட்பாடுகளுக்கு முக்கிய பங்கு உள்ளது. கோட்பாடுகள் வெறும் இறையியல் கருத்துகள் அல்ல; மெய்யான கோட்பாடுகள் எல்லாம் கிறிஸ்துவை மையமாகக் கொண்டவை; அவை நாம் வாழ்கிறவிதத்தில் தாக்கத்தை உண்டாக்குகின்றன. செவந்-டே அட்வென்ட்டிஸ்டுகள் என்கிற நம்முடைய அடையாளமும் மற்ற எல்லாவற்றையும்விட நம்முடைய கோட்பாட்டு போதனைகளைச் சார்ந்துதான் இருக்கிறது. வேதாகமத்திலிருந்து பெறப்படுகிற இந்தப் போதனைகள்தாம் நம்மை செவந்-டே அட்வென்ட்டிஸ்டுகளாக உருவாக்குகின்றன.

இயேசுவில் வெளிப்படுகிற சத்தியத்தின்படி வாழும்போது உக்கிராணத்துவத்தின் பங்கை நிறைவேற்றுகிறோம்; அது நம் வாழ்க்கையிலும் நல்ல தாக்கத்தை ஏற்படுத்துகிறது. 'இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே. அந்தப்படி முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்.' எபேசியர் 4:21-24.

சத்தியத்தை அறிவதுமட்டுமல்ல, அதன்படி நடப்பதும் அவசியமென இந்த வசனங்கள் அறிவுறுத்துகின்றன. ஒரு உக்கிராணக்காரன் கோட்பாடுகளை நம்புகிறவனாகமாத்திரம் இருக்கமாட்டான்; அந்தக் கோட்பாடுகள் உண்மையானவையாகக்கூட இருக்கலாம்; மாறாக, ஓர் உக்கிராணக்காரன் அந்தக் கோட்பாடுகளின்படி வாழுவான்; மற்றவர்களோடுள்ள உறவிலும் வெளிப்படுத்துவான்.

வரப்போகும் அழிவுகுறித்து இரண்டுமுறைதான் தேவன் உலகத்தாரை எச்சரித்திருக்கிறார். முதலாவது நோவாமூலம் எச்சரித்தார். ஆதி 6:13-18; மத் 24:37. இரண்டாவது, மூன்று தூதர்களுடைய செய்திகளின்மூலம் எச்சரிக்கிறார். வெளி 14:6-12. இனிநேரிடும் உலக நிகழ்வுகள்குறித்த ஒரு புதிய கண்ணோட்டத்தை இந்தச் செய்திகள் முன்வைக்கின்றன. இந்தச் செய்திகள்குறித்த நம் புரிந்துகொள்ளுதல் காலப்போக்கில் தேறியிருந்தாலும், கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசத்தால் நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம் என்பதையே அச்செய்திகள் தெரிவிக்கின்றன; அதுதான் நம் ஊழியப்பணியாகவும், 'மெய்யாகவே மூன்றாம் தூதனின் தூதாகவும்' இருக்கிறது. - எலன் ஒய்ட், *Ev, p 190.* அதாவது, இயேசுவும் அவர் நமக்காகச் செய்த மாபெரும் தியாகமுமே நம்முடைய தற்காலச் சத்தியத்தின் மையமாக உள்ளன; இதை அறிவிக்கவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

***வெளி 14:6-12இல் சொல்லப்படும் செய்திகளின் சாராம்சம் என்ன? உலகத்திற்கு அவை என்ன அறிவிக்கின்றன? இச்செய்திகள் நம்மேல் சுமத்துகிற பொறுப்பு என்ன? இதில் உக்கிராணத்துவம் எவ்வாறு சம்பந்தப்பட்டுள்ளது?***

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாக மூன்று தூதர்களுடைய செய்திகளின் சத்தியத்தை அறிவிப்பதே செவந்த்-டே அட்வென்ட்டிஸ்டுகளின் ஊழியப்பணியாகும். நித்தியம்குறித்து தீர்மானிக்க திறனுள்ளவர்களாக மக்களை மாற்றவேண்டும். இந்தப் பணியில் தேவனோடு கூட்டுச்சேர்ந்து உக்கிராணத்துவம் பங்காற்றுகிறது. 2கொரி 5:20; 6:1-4.

'செவந்த்-டே அட்வென்ட்டிஸ்டுகள் ஒரு விசேஷித்தவிதத்தில் காவல்காரர்களாகவும் வெளிச்சமுள்ளவர்களாகவும் உலகத்தில் வைக்கப்பட்டுள்ளார்கள். அழிந்துகொண்டிருக்கும் உலகிற்கு கடைசி எச்சரிப்பை அறிவிக்கும் பணியை அவர்களிடம் தேவன் தந்திருக்கிறார். தேவ வார்த்தையிலிருந்து ஆச்சரியமான வெளிச்சம் அவர்கள்மேல் பிரகாசிக்கிறது. மிகவும் பரிசுத்தமான ஒரு பணி அவர்களிடம் தரப்பட்டிருக்கிறது; முதலாம், இரண்டாம், மூன்றாம் தூதர்களுடைய செய்தியை அறிவிப்பதே அந்தப் பணி. இதைவிட முக்கியமான பணி ஏதுமில்லை. வேறு எதுவும் தங்கள் கவனத்தை ஆக்கிரமிக்க, அவர்கள் அனுமதிக்கக்கூடாது.'
- *EGW, 9T, p 19.*

தரையைத் தொட்டுச்செல்லக்கூடிய ஒரு சக்கரத்தின் விளிம்பானது, மூன்று தூதர்களுடைய செய்திகள் சொல்லும் ஊழியப்பணியைச் சுட்டிக்காட்டுகிறது. வேதாகமம் திரிக்கப்படுவதைத் தடுப்பதும், கடைசிக்கால நிகழ்வுகளில் நம்முடைய பொறுப்பை அடையாளங்காண்பதுமே இவர்களது ஊழியப்பணியாகும். இச்செய்தியின் உக்கிராணக்காரர்களாக, இதை உலகத்திற்கு அறிவிக்கவேண்டும்.

கடைசிக்கால நிகழ்வுகள் என்றதும், அட்டவணைகளிலும் காலக்கணக்கீடுகளிலும் மூழ்கும் அபாயம் உள்ளது. இவையும் முக்கியம்தான்; ஆனால் இந்தச் செய்தியை நாம் உலகத்திற்கு அறிவிக்கும்போது, இயேசுவையும் அவர் நமக்காகச் செய்த தியாகத்தைமட்டுமே முன்னிறுத்துவதும், மையப்படுத்துவதும் ஏன் முக்கியமானது?

நாம் பரிசுத்தமாக வாழ்வதை கிறிஸ்து விரும்புகிறார். 'பரிசுத்தத்தையும்', உக்கிராணத்துவத்தின் முழு அர்த்தத்தையும் அவர் வாழ்க்கை எடுத்துக்காட்டியது. எபி 9:14. தேவனுக்கு பிரியமானவிதத்தில் நம் வாழ்க்கையை நிர்வாகம்செய்ய வேண்டும்; நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்தையும் அவ்வாறு நிர்வகிக்கவேண்டும். அந்தப் பரிசுத்தத்தின் வெளிப்பாடே உக்கிராணத்துவம்.

**1பேதுரு 1:15,16ஐ எபிரெயர் 12:14 உடன் ஒப்பிடவும். பரிசுத்தம் என்றால் என்ன? பரிசுத்தமாயிருத்தல் என்றால் என்ன? இது எவ்வாறு உக்கிராணத்தவத்துடன் சம்பந்தப்பட்டது?**

சக்கரத்தின் விளிம்பைச்சுற்றிலும் இரும்பு பட்டையைப் பொருத்தினால் இரதத்தின் சக்கரம் நீடித்து உழைக்கும் என்பதை ரோமர்கள் கண்டுபிடித்தார்கள். கொல்லர்கள் இரும்பு பட்டையைச் சூடாக்கி, விரியச்செய்து விளிம்பில் சரியாகப் பொருத்துவார்கள்; பிறகு குளிர்ந்த தண்ணீரை ஊற்றும்போது விளிம்போடு இறுக்கமாக ஒட்டிக்கொள்ளும். சக்கரம் உருளும்போது அந்த இரும்புப்பட்டை தான் தரையைத் தொட்டுச்செல்லும்.

விளிம்புமேல் ஒட்டியிருக்கும் அந்த இரும்புப்பட்டையை வைத்து உக்கிராணத்துவத்தின் கருத்தை விளங்கிக்கொள்ளலாம். நாம் வாழவேண்டிய ஆவிக்குரிய வாழ்க்கையையும் வாழ்ந்துகொண்டிருக்கும் வாழ்க்கையையும் சத்தியமானது உரசிப்பார்க்கிற தருணத்தை அது விளக்குகிறது. வெற்றிகளிலும் தோல்விகளிலும் நம் விசுவாச வாழ்க்கை சந்திக்கும் மேடு பள்ளங்களை அது விளக்குகிறது. அனுதின வாழ்க்கையின் கொடும் சச்சரவுகளுக்குமத்தியில் நம் நம்பிக்கைகளின்படி வாழ்கிறோமா என்று சோதிக்கப்படுகிற தருணத்தை விளக்குகிறது. நாம் யார், என்ன செய்கிறோம் என்பதைத் தோலுரித்துக் காட்டுவது உக்கிராணத்துவம். எவ்வாறு நடக்கிறோம், எவ்வாறு வாழ்க்கையை நிர்வகிக்கிறோம் என்பதற்கான சாட்சி அது. அனுதின வாழ்க்கையில் கிறிஸ்துவை வெளிப்படுத்துகிற செயல்கள், சாலையைத் தொட்டுச்செல்லும் சக்கரத்தின் இரும்புப் பட்டை போன்றதாகும்.

செயல்கள் வலுவாகப் பேசக்கூடியவை; கிறிஸ்துவுக்கு நம்மை அர்ப்பணித்து, அவற்றைக் கட்டுப்படுத்தவேண்டும். 'என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு' என்கிற நிச்சயத்தோடும் வாக்குறுதியோடும் வாழவேண்டும். பிலி 4:13.

'பரிசுத்த ஆவியானவரின் கிரியையால் ஆத்துமா பரிசுத்தமாக்கப்படுவது தான் மனிதனுக்குள் கிறிஸ்துவின் தன்மை உருவாவதாகும். வாழ்க்கையில் கிறிஸ்து வருவதே சுவிசேஷம்; இது உயிருள்ளதும் செயல்படுகிறதுமான நியதி. இது கிறிஸ்துவின் கிருபையை குணத்தில் வெளிப்படுத்தி, நற்கிரியைகளைச் செய்வதாகும். நடைமுறை வாழ்வின் எந்த விஷயமும் சுவிசேஷத்தோடு தொடர்பு இல்லாமல் இருக்காது. கிறிஸ்தவ அனுபவத்தின் ஒவ்வோர் அம்சமும் பிரயாசமும் கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டவேண்டும்.' – *EGW, COL, p 384.*

உங்கள் அனுதின வாழ்க்கையானது, கிறிஸ்து உங்களுக்குள் இருப்பதை, உங்களை புது சிருஷ்டியாக மாற்றுவதை வெளிப்படுத்துகிறதா? அவருடைய பரிசுத்தம் உங்களில் வெளிப்பட என்ன தீர்மானங்களை நீங்கள் செய்யவேண்டியுள்ளது?

சில சமயங்களில் சக்கரங்களின் இரும்புப் பட்டையானது சாலையில் பட்டுப் பட்டு நீண்டுவிடுவதால், அதைச் சரிசெய்து மீண்டும் பொருத்தவேண்டும். சரி செய்யும்போது, சுத்தியலால் அதை கடுமையாக அடிக்க நேரிடலாம். இவ்வாறு இரும்புப்பட்டை சரிசெய்யப்படுவது, உக்கிராணத்துவமானது நடைமுறைரீதியாகப் பரிசுத்தமாக்கப்படுவதைச்சுட்டிக்காட்டுகிறது. வாழ்க்கையின் சிறு விஷயமானாலும், பெரிய விஷயமானாலும், அது பயங்கர வலியைத் தந்தாலும், கிறிஸ்துவின் சிந்தையோடு அதை அணுகுவதைக் காட்டுகிறது. பணம், குடும்பஉறவுகள், வேலை போன்று எதுவாகஇருந்தாலும்கிறிஸ்துவின்சித்தத்திற்கு உட்பட்டு அணுகவேண்டும். ஆனாலும், சிலசமயங்களில் கடுமையாக சில அடிகளை வாங்கியபிறகே இந்தப் பாடத்தைக் கற்றுக்கொள்ளமுடிகிறது.

இரும்பைச் சரிசெய்வது எளிதானதல்ல. அதுபோலவே மனித குணத்தைச் சரிசெய்வதும் எளிதல்ல. பேதுரு, எப்போதும் இயேசுவோடு இருந்தார்; 'நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து' என்று தன்னைக் குறித்த இயேசு சொல்வாரென எதிர்பார்த்திருப்பாரா? லூக் 22:32. இயேசுவை மறுதலித்த பிறகுதான் மனம் மாறுகிறார், ஆனாலும் மிகவும் வேதனையான, கடினமான அனுபவத்தை அடைய வேண்டியிருந்தது. அவருடைய உக்கிராணத்துவம் சீரமைக்கப்பட்டது. புதிய மனுஷனான பேதுரு புதியதொரு வாழ்க்கையை வாழவிருந்தார்.

# கலந்துரையாடக் கேள்விகள்

1. *தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு என்று இயேசு சொல்கிறார். லூக் 9:23. நடைமுறையில் பரிசுத்தமாக்கப்படுவதற்கு இது எவ்வாறு உதவியாக இருக்கும்? எது சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது? கலா 6:14. பரிசுத்தமாக்கப்படுதலின் படிநிலையை இது எவ்வாறு விளக்குகிறது? நடைமுறையில் பரிசுத்தமாக்கப்படுதல் எவ்வாறு கிறிஸ்துவின் சிந்தையைப் பெற்றுக்கொள்ள உதவியாக இருக்கும்?*

2. *வேதனையான அனுபவங்கள்மூலம் கிறிஸ்தவ வாழ்க்கை குறித்தும், ஆண்டவரைப் பின்பற்றுவதுகுறித்தும் பயன்மிக்க சில பாடங்களைக் கற்றுக்கொள்கிறோம், இதில் உங்களுடைய அனுபவம் என்ன? நீங்கள் கற்றுக்கொண்டதை முடிந்தால் வகுப்பில் பகிர்ந்துகொள்ளுங்கள். ஒவ்வொருவருடைய அனுபவத்திலிருந்தும் நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?*

3. *ஓய்வுநாள், மரித்தோரின் நிலை, சிருஷ்டிப்பு, இரண்டாம் வருகை குறித்த கோட்பாடுகள் போன்றவை செவந்த்-டே அட்வென்ட்டிஸ்டுகளின் தனிச்சிறப்பாகும். இப்படிப்பட்ட கோட்பாடுகள் எவ்விதங்களில் எல்லாம் நம்முடைய வாழ்க்கையில் தாக்கத்தை உண்டாக்கவேண்டும்?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,
டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,
15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

1. YOUTUBE க்குப் போய், **Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள். HopeChannel INDIA

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

2. YOUTUBE க்குப் போய், **Tamil Sabbath School**

என்று டைப் பண்ணினால்,
ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களின் மொழிபெயர்ப்பாளர் நடத்தும் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*